INSTITUT NATIONAL DU CANCER

# பரிசோதனை எப்படி செய்வது?

**உங்களிடம் பரிசோதனை மேற்கொள்ளச் சொல்லி வந்த கடிதத்தில் இரண்டு ஒட்டும் வில்லைகள் இருந்தால் 1 மற்றும் 2 எனக் குறிப்பிட்டுள்ள செயல்களைச் செய்து பின் 3 க்குச் செல்லவும். உங்களிடம் கடிதம் இல்லையென்றால் நேராக கீழே கொடுக்கப்பட்டுள்ள 1பிஸ் ஸுக்குச் செல்லவும்.**



**1** **பெரிய வில்லையை அடையாளம் காட்டும் படிவத்தின் மீது ஒட்டவும்.** இது உபகரணத்தின் மத்தியில் உள்ளது. **பிறகு இந்த படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.**



**2** **சிறிய வில்லையின் மீது பரிசோதனை செய்த தேதியைக் குறிப்பிடவும்.** பிறகு அதை டியூபின் தட்டையான பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டவும்.



**1 bis** «பெயர்»,«தேதி» ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. உபகரணத்தின் மத்திய பகுதியில் உள்ள அடையாளச் சீட்டு மற்றும் வில்லையைக் கவனமாகப் பூர்த்தி செய்யவும்.



**2 bis** **வில்லையை டியூபின் தட்டையான பகுதியில்** <<பெயர்>>, <<தேதி>> ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது என்று எழுதியுள்ள இடத்தில் ஒட்டவும். பின் 3 வது நிலைக்குச் செல்லவும்.



**3** **பரிசோதனைக்கு மலம் சேகரிக்கும் காகிதத்தை தானே ஒட்டிக் கொள்ளும் டேப்களின் உதவியுடன் டாய்லெட்டின் விளிம்பில் ஒட்டவும்.** காகிதத்தின் நடுவே சிறு பள்ளம் வருமாறு லேசாக அழுத்தவும்.

**முக்கியக் குறிப்பு: பரிசோதனை சரியாக வருவதற்கு அதற்காக எடுக்கும் மலத்துடன் எந்தவித திரவமும் படாமல் இருப்பது அவசியம் ( சிறுநீர், ப்ளீச்.)**



**4** **மூடியைத் திருப்பி டியூபைத் திறக்கவும்.**



**5** **கொடுக்கப்பட்டிருக்கும் குச்சியால் எடுக்கப்பட்ட மலத்தின் மேல் பல முறை தேய்க்கவும்.**



**6** **குச்சியின் கோடிட்ட பகுதி முழுவதும் மலத்தால் மூடப்பட்டிருக்க வேண்டும்.**



**7** **டியூபை மூடிவிட்டு அதை வேகமாகக் குலுக்கவும்.**



**8** வில்லைகளைச் சரியாகப் பூர்த்தி செய்துள்ளீர்களா மற்றும் நன்கு ஒட்டியுள்ளீர்களா என்று சரி பார்க்கவும். **டியூபைப் பாதுகாப்பு உறையில் நுழைக்கவும்.**



**9** **டி உறையில் :**
- **டியூப் உள்ள பாதுகாப்பு உறையையும்**
- **பூர்த்தி செய்த அடையாள வில்லையையும் வைக்கவும்.**

பிறகு உறையை மூடவும்.



**10** **டி உறை சோதனைக்கு ப் பொருள் எடுத்த்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் தபாலில் அனுப்பப்படவேண்டும்.**

சோதனையின் முடிவு 15 நாட்களுக்குள் தபால் மூலம் அனுப்பப்படும். இணைய தளம் மூலம் பெற விரும்பினால் தயவு செய்து **www.resultat-depistage.fr** என்கிற தளத்தில் பதியவும்.

## + தகவல்:

- உங்கள் மருத்துவரிடம்
- **e-cancer.fr** இணைய தளத்தில் ட்ராக்கிங் தலைப்பின் கீழ்.
- திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரையிலும் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலும் 0805123124 என்ற தொலைபேசியில் (உள்ளூர் அழைப்புக் கட்டணம்)
- உங்கள் மாவட்டதிதில் உள்ள தகவல் பொறுப்பாளரிடமிருந்து.

## சந்தேகங்கள்:

- **எந்த காலத்திற்குள் சோதனையை முடிக்க வேண்டும்?**
  காலாவதி ஆகும் தேதி டியூபின் மேல் குறிக்கப்பட்டுள்ளது.
- **டியூபை நான் தொலைத்து விட்டேன்/ டியூப் வீணாகி விட்டது. நான் என்ன பண்ணுவது?**
  உங்கள் மருத்துவரை அணுகி புது பரிசோதனைக்குக் கேட்கவும்.
- **சோதனைக்கு சாம்பிள் சரியாக எடுக்க முடியவில்லை என்ன செய்வது?**
  உங்கள் மருத்துவரை அணுகவும் அல்லது உங்கள் வட்டத்தில் உள்ள சோதனை அலுவலகத்தில் விசாரிக்கவும். அவர்கள் உங்களுக்கு ஆலோசனை கொடுத்து ஒரு புது பரிசோதனைக்கு ஏற்பாடு செய்வார்கள்.